# கிறிஸ்துவின் வசனம்

கொலோ 3:16
(WORD OF CHRIST)

செப்டம்பர்
1992.

ஆசிரியர்:
சகோ. அர்ச்சுனன் II கொரி 3:6.

வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக!

இவ்விதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த இரண்டாவது இதழை வெளியிடச்செய்த தேவனுக்கு ஸ்தோத்திரத்தையும், உற்சாகப்படுத்திய ஒவ்வொருவருக்கும் என் நன்றியையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன். இவ்விதழை படித்து முடித்தப்பிறகு உங்கள் நண்பர்களுக்கும் கொடுத்து உதவுங்கள் அவர்களும் சத்தியத்தை தெரிந்து கொள்ளட்டும். சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும். என்று நமதாண்டவர் யோவான் 8:32 ல் சொன்ன வார்த்தையை நினைவு கூறுங்கள் மேலும் இவ்விதழை குறித்த கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வரவேற்கிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம் அனைவரோடும் கூட இருப்பதாக! ஆமென்.

ஆசிரியர்,

# ஆவியின் சிந்தை

**(Spiritual mind)**

அன்பான தேவ பிள்ளைகளே! ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினை தீர்ப்பில்லை என்று ரோமருக்கு எழுதின நிருபம் 8:1 ல் வாசிக்கிறோம். நாம் நம்முடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய சிந்தையில்வளர்கிறோமா? அல்லது மாம்சசிந்தையில் வளர்கிறோமா? மாம்ச சிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் என்று ரோமர் 8:6 ல் வாசிக்கிறோம்.

நிலையில்லா மாம்சத்தில் நாம் அனுதினமும் உழன்று தவிக்கிறோம். அழிந்து போகின்ற நம்முடைய மாம்சத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டு கிறிஸ்துவுக்கு பிரியமில்லா வாழ்க்கை வாழ்ந்து வருகின்றோம். இதனுடைய முடிவு மரணம் என்று பார்க்கிறோம்.

அன்பான தேவபிள்ளைகளே ஒருசிறு உதாரணங்களை தெரியப்படுத்த விரும்புகிறேன். அனனியா, சப்பீராள் தேவசமூகத்தில் மாமிச சிந்தையில் பொய்சொன்னார்கள், உடனே மரணம் அவர்களை ஆட்கொண்டது.மாமிசத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்! ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள் என்று ரோமர் 8.13 ல் சொல்லப்பட்டபடி அவர்கள் அதேஇடத்தில் மரித்தார்கள் இதேபோல இஸ்ரவேலர் மாமிசஇச்சைக்கு இடங்கொடுத்து வனாந்தரத்திலே அழிக்கப்பட்டார்கள், அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்கு திருஷ்டாந்தங்களாயிருக்கிறது. 1 கொரி10:5,6, இப்படியிருக்க நாம்இன்னும் மாமிசசிந்தையில் இருக்கலாமா? கூடாதே ஆவியின்சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் நம்முடைய வாழ்க்கையில் சமாதானம் வேண்டுமென்றால் ஆவிக்குறியகாரியங்களை சிந்தித்துக்கொண்டு கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக வளர்வோமாக! கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல ஆகையால் கிறிஸ்து உங்களில் இருந்தால் சரீரமானது பாவத்தின் நிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்த ஜீவனுள்ளதாயுமிருக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உங்களோடிருந்து உங்களை ஆவியின்சிந்தையில் வழிநடத்துவாராக!

ஆமென்.

**சபையின் செய்திகள்:** ★ கடந்தமாதம் 28ந் தேதி மாலையில் சுவிசேஷக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. அநேகர் பங்குபெற்று தேவ செய்தியை கேட்டனர். பொள்ளாச்சியிலிருந்து சகோ மைக் அவர்கள் வந்து தேவ செய்தி அளித்தார்.

**ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்** ★
யாக் 5:16

சகோ. மகாலிங்கம் மகன் **ஜெயபாண்டிக்கு** கழுத்திலுள்ள கட்டி சுகமாக

சகோ **கனகராஜ்** & பிரதர்ஸ் புதியஇல்லம் 14ம் தேதி காலை8 மணிக்கு பிரதிஷ்டை இனிதே நடைபெற

**பரிசு:**★ சென்ற இதழின் வேத அறிவுப்போட்டியில் முதல் பரிசு பெற்றவர் சகோதரி **மேரி** அவர்கள் வத்தலக்குண்டு.

ஆறுதல்பரிசு பெற்றவர்கள்: சகோ: **சிதம்பரம்**

சகோதரி, **டோனி**, வத்தலக்குண்டு.

## சென்ற இதழின் விடைகள்: ★

(1) ஆதாம் ஆதி 2 : 19

(2) 950 ஆதி 9 : 29

(3) தானியேல் தானி 6 : 16

(4) யோவான் ஸ்நானகன் மத் 3 : 13

(5) வெள்ளி தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச்சமானம் நீதி 25 : 11

(6) 66 புத்தகங்கள்

(7) பவுல்

(8) 13 பிள்ளைகள்

(9) 12 பேர்

(10) வெளிப்படுத்தின விசேஷம்

## வேத அறிவுப் போட்டி ★

1 இஸ்ரவேல் புத்திரர் எத்தனை வருடம் மன்னாவை புசித்தார்கள்

2 நடுவானத்தில் ஒரு பகல் முழுவதும் சூரியனையும் சந்திரனையும் நிறுத்தியது யார்?

3 வேதத்தில் கூறப்பட்டுள்ள மனிதர்களில் அதிக நாட்கள் உயிரோடிருந்த மனிதனின் பெயர் என்ன?

4 எந்த நாளில் அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்தார்கள்?

5 ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவன் எதில் தள்ளப்பட்டான்?

6 யூப்பித்தர், மெர்க்கூரி என்று யாரை சொன்னார்கள்?

7 100 ஆடுகளைப்பற்றிய உவமையில் எத்தனை ஆடுகள் காணாமல் போனது?

8 வேதத்தில் உள்ள மிக சிறிய வசனம் எது?

9 வேதத்தின் முதல் புத்தகம் எது?

10 வேதத்தில் உள்ள மொத்த அதிகாரங்கள் எத்தனை?

முன்பக்கத்தில் இருக்கும் 10 கேள்விகளில் முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்தோடு விடை தருக. கீழுள்ள ஐந்திற்கு விடை மட்டும் தருக. உங்களுடைய விடைகளை கீழ்க்காணும் முகவரிக்கு ஒரு போஸ்ட் கார்டில் இம்மாத இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பவும் சரியான விடை எழுதுபவர்க்கு பரிசு அனுப்பப்படும்.

**அன்புடன் அழைக்கிறோம்** ☆

எங்களோடு தேவனை ஆவியோடும், உண்மையோடு தொழுதுகொள்ள வேண்டிய முகவரி யோவான் 4 : 24

## கிறிஸ்துவின் சபை

கணவாய்பட்டி ரோடு,
தண்ணீர் டாங்கு சமீபம்,
வத்தலகுண்டு.

If undelivered please return to:

**THE EDITOR:**
**Word of christ,**
**Post Box No. 5**
BATLAGUNDU-624202.
Anna Dt.

**செப்டம்பர் 1992**

---

**For Private Circulation only**

---

Published by Batlagundu church of Christ and
Printed at Shanthi Press, Batlagundu-624 202